**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 9/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திருமதி. கௌரி** |
| Father's Name/Husband Name: | **திரு. குலோத்துங்கன்** |
| Village : | ஆடுதுறை |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர். எதிரி 3 வரை இல்லை. அவருக்காக 317 குவிமுச மனு அனுமதிக்கப்படுகிறது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆடுதுறை கிராமத்தில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 13.03.2023ம் தேதியன்று எனது மாமனாரின் சகோதரர் பழனி என்பவர் இறந்த 15ம் நாள் நிகழ்விற்கு நானும் எனது மகன் கிஷோர்குமார் என்பவரும் திருமாந்துறைக் சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் காலை 10.45 மணியளவில் திருமாந்துறையில் உள்ள இராமலிங்கம் ஆசாரி இடத்திற்கு வந்த போது எதிரிகள் மூவரும் வந்து என்னையும் எனது மகனையும் அசிங்கமான வார்த்தையான தேவிடியா குச்சிக்காரி என்று சொல்லி திட்டினார்கள். நான் எதற்கு என்னை திட்டுகிறீர்கள் என்று கேட்ட போது என்னை ராஜா என்பவர் கீழே தள்ளி நெஞ்சில் குத்தி ஜாக்கெட்டை கிழித்து விட்டார்கள். நான் கத்தியபோது என் மகனையும் 1ம் எதிரியுடன் வந்த மற்ற எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள். ராஜா என்பவர் கையில் வைத்திருந்த கீ செயினில் உள்ள பேனா கத்தியால் என்னை குத்த வந்தார். நான் தடுத்த போது

என்னுடைய இடது கையை பிடித்தார். அப்போது பேனா கத்தி கிழித்ததால் வலது முன் கை மற்றும் மோதிரவிரலில் காயம் ஏற்பட்டது. கண்ணாடி வளையலை அழுத்தி பிடித்ததால் என் கையில் காயம் ஏற்பட்டது. பின்னர் நான் கத்திய போது 1ம் எதிரி உன்னையும் உன் மகனையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி பேனா கத்தியை வைத்துக் கொண்டு சொன்னார். பொதுமக்கள் அங்கு வந்து விட்டார்கள். காயம் அடைந்த நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல் ஆய்வாளர். நான் அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் ஒரு வாரத்திற்கு மேலாக இருந்தேன். எப்போது மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தேன் என்றால் சம்பவம் நடந்த அரை மணிநேரத்தில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் என் மகனுடன் இரு சக்கர வாகனத்தில் சென்றேன். மங்களமேடு காவல் நிலையத்தை தாண்டி தான் நான் இரு சக்கர வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்ற பின் போலிசார் எப்போது என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே மருத்துவமனையில் வாங்கினார்கள். போலிசார் விசாரணையின்போது எனக்கு அடிப்பட்ட கை வலது கை அல்லது இடது கை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் எந்த கையை குறிப்பிட்டு சொன்னேன் என்றால் இடது கை. சம்பவம் நடக்கும் போது நான் திட்டக்குடியில் குடியிருந்தேனா அல்லது ஆடுதுறையில் குடியிருந்தேனா என்றால் திட்டக்குடியில் குடியிருந்தேன். சம்பவம் நடக்கும்போது நான் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றேன் என்றால் கிழக்கு திசை நோக்கி சென்றேன். எதிரிகள் எந்த திசையிலிருந்து வந்தார்கள் என்றால் எங்களுக்கு எதிரே வந்தார்கள். வழக்கு சம்பவம் நடந்த இடமான இராமலிங்கம் ஆசாரி இடம் நான்கு ரோடு சாலை என்றால் சரியல்ல ஒரே ரோடு தான்.

சம்பவம் நடந்த விவரம் யாருக்கெல்லாம் தெரியும் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் போலிசாரே விசாரித்து சாட்சிகளை எழுதிக் கொண்டார்கள். நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருக்கும் போது ஆண் போலிசார் விசாரித்தார்களா அல்லது பெண் போலிசார் விசாரித்தார்களா என்றால் இரண்டு ஆண் போலிசார் விசாரித்தார்கள். வெளியில் இருந்து ஏதேனும் எழுதிக் கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. நான் சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டார்கள். சம்பவம் நடந்த அன்றே புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் வாக்குமூலம் பெறும்போது டைப் செய்தார்களா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் எனக்கு நெஞ்சு வலி வந்ததால் எனக்கு நினைவில்லை. நெஞ்சுவலி குறித்து மருத்துவமனையில் ஸ்கேன் எக்ஸ்ரே எதுவும் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அந்த ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ரிப்போர்ட்டை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மகள் ரோஜாபாரதிக்கும் 1ம் எதிரிக்கும் காதல் திருமணம் என்றாலும் எனது மகளும் 1ம் எதிரியும் வெவ்வேறு மாற்று சமூகத்தினர் என்றாலும் எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் குடும்ப நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் 1ம் எதிரி எனது மகளுடன் தான் சேர்ந்து வாழ்வேன் என்று பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரியை நாங்கள் அடித்தாக எங்கள் மீது இந்நீதிமன்றத்தில் CC 78/2025 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். குன்னம் நீதிமன்றத்தில் எனது மகன் மீது 3ம் எதிரியின் மனைவி பிரியதர்ஷினி கொடுத்த புகார் சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். கிழிந்த ஆடைகளை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. கையில் இரத்தம் வந்ததற்கான இரத்த பரிசோதனை செய்தார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு ஞாபகமில்லை கட்டுப்போட்டு சிகிச்சை அளித்தார்கள். எதிரிகள் யாரும் எங்களை அடிக்கவில்லை என்றாலும் எனது மகளுக்கு விவாகரத்து கொடுக்காததால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொது இடம் என்றாலும் அங்கு வாகனங்கள் அதிகமாக வரும் என்றாலும் உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் பொதுமக்கள் எதிரிகளை தட்டி கேட்டிருப்பார்கள் என்றாலும் சரியல்ல. நாங்களே எங்களுக்கு காயம் ஏற்படுத்திக்

கொண்டு எதிரிகள் தான் காயம் ஏற்படுத்திவிட்டார்கள் என்று புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.